இனிப்பு, சொக்கலட், பிஸ்கட் மற்றும் பழவற்றல்கள் விற்பனையாளர்
கணேஷா வர்த்தக நிலையம், 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கேக் தயாரிப்பு பொருள்கள் மற்றும் குளிர்பானத் தயாரிப்புகளைப் பெற்றிட;
கணேஷா வர்த்தக நிலையம் 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 10 செவ்வாய்க்கிழமை (24 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 58

# நான்காம் கட்டப் பேச்சு அடுத்த வாரம் நடக்கும்?

## அரச தரப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜனவரி 24

ஸ்ரீலங்கா அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நான்காம் கட்டப் பேச்சுக்கள் அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

அரச உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகைகள் இத்தகவலை வெளியிட்டன.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக அரசு முன்வைக்க விரும்பும் ஆலோசனைகளை அரச தரப்புப் பிரதிநிதிகள் இந்தப் பேச்சுக்களின் போது புலிகளிடம் சமர்ப்பிப்பர் என்று நம்பகமாகத் தெரியவருவதாக அந்தப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் —

குடாநாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆராய்வது அர்த்தமற்றது என விடுதலைப் புலிகள் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுக்கு திட்டவட்டமாக எடுத்துக் கூறிவிட்டனர் என்பது தெரிந்ததே.

எனவே —

அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான விடயங்களுக்கு சரியான முடிவுகளுடன் அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் அடுத்த கட்டப் பேச்சுக்கு [நான்காம் கட்டப் பேச்சுகளுக்கு] வராவிட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றிய விடயம் அப்பேச்சுக்களின் போது இடம்பெறுவதற்கு வாய்ப்பே இல்லை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் குறிப்பிட்டன. [உ-3]

## ஹொலண்ட் பத்திரிகையாளர் யாழ். வருகை

வடமராட்சி, ஜன. 24

ஹொலண்ட் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

சி. வி. எம் புரோறி [C.V.M Broere] என்ற பத்திரிகையாளரே இங்குவந்து சேர்ந்தவராவார்.

விமானம் மூலம் பலாலிக்கு வந்த அவர் பின்னர் கப்பல் மூலம் பருத்தித்துறை ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



''ஷொக்'' அடிக்கிற செய்தியாய் எல்லோ கிடக்கு...

## காலிதா ஸியா கொழும்பு விஜயம்

கொழும்பு, ஜன. 24

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா நாளை கொழும்பு வருகிறார்.

சார்க் அமைப்பின் தலைவர் என்ற வகையிலும், பங்களாதேஷ் பிரதமர் என்ற முறையிலும் அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பேச்சு நடத்தவுள்ளார். (ஐ-6)

## தமிழரின் அபிலாசையை நன்கு அறிந்தவன் நான்

### ஆளுநர் பொன்சேகா சொல்கிறார்

''தமிழ் மக்களின் அபிலாசைகளை நான் நன்கு அறிவேன். அவர்கள் எனக்குப் புதியவர்கள் அல்லர்''

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ள காமினி பொன்சேகா மூன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்களின் பிரச்சினைகள், அவர்கள் பட்ட துன்பங்கள் எப்படிப்பட்டவை, அவர்கள் நடத்தி வந்த போராட்டங்கள் என்பன பற்றியும் எனக்குநன்குதெரியும். எனவே என்னிடம் தரப்பட்ட இந்தப் புதிய கடமைகளை மனித நேயத்துடன் செய்வேன்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## ஐ.நா. அலுவலகத்துக்கு நவீன தொடர்பு கருவி!

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அலுவலகத்துக்கு நவீன தொலைத் தொடர்பு கருவிகளை பொருத்தும் வேலை நடைபெற்று வருகிறது.

அண்மையில் கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டிருந்த இந்தக்கருவிகளை பொருத்துவதற்காக கொழும்பில் இருந்து தொழில் நுட்பவியலாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தொலைத் தொடர்புக் கருவிகளைப் பொருத்தும் வேலையை நேற்று அவர்கள் மேற்கொண்டனர்.

வெளியிடங்களுக்கு விரைவாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ள இந்த நவீன கருவிகள் உதவும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஐ-3]

## திருமலையில் இருந்து அடிக்கடி

## ''ஹபரண'' கப்பல் மூலம் மா ஏற்றிவர நடவடிக்கை

யாழ். மாவட்டத்துக்கு மா ஏற்றி வரும் பணியில் 'ஹபரண' கப்பல் தொடர்ந்து ஈடுபடுத்தப்படவுள்ளது.

திருமலைக்கும் – பருத்தித் துறைக்கும் இடையே மா ஏற்றி இறக்கும் சேவையில் இக்கப்பலை ஈடுபடுத்த புனர்வாழ்வு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

குடாநாட்டில் மா பாவனை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதை அடுத்து—

தட்டுப்பாடு ஏற்படாத விதமாக பொதுமக்களுக்கு மாவினை விநியோகிக்க வசதியாகவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## அகதி முகாம் பராமரிப்பு பிரதேச செயலர்களிடம்!

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம், அகதி, முகாம்களைப் பராமரித்தல், திருத்தி அமைத்தல், சுகாதார வசதிகளைச் செய்தல், உணவு விநியோகம் ஆகிய பணிகள் இனி பிரதேச செயலாளர்களினாலேயே மேற்கொள்ளப்படும்.

இதேவேளை —

அரச சார்பற்ற நிறுவனங்களால் அகதி முகாம்களில் ஏற்கனவே நடத்தப்பட்டு வரும் சுய தொழில் வாய்ப்புத் திட்டம், கல்வித்திட்டம், விசேட சுகாதாரத் திட்டம் ஆகியனவற்றை அந்த அமைப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டில் இரண்டாம் ஈழப் போர் ஆரம்பித்த பின்னர் யாழ். மாவட்டத்தில் அகதி முகாம்களைப் பராமரிக்கும் பணி அரசசார்பற்ற நிறுவனங்களே முழுதாகச் செய்துவந்தன. (ஐ-3)

## இரத்தினச் சுரங்கத்தினுள் விசவாயு கசிந்து 4 பேர் பலி!

கொழும்பு. ஜன. 24

குருவிற்றவிலுள்ள இரத்தினச் சுரங்கம் ஒன்றினுள் ஏற்பட்ட விசவாயுக் கசிவினால் நால்வர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுரங்கத்தினுள் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் விசவாயுவை இவர்கள் சுவாசித்ததால் மரணம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களில் மூவர் சகோதரர்களாவர். (ஐ-6)

## நிபுணர் குழு நேற்று வடமராட்சிக்கு விஜயம்

வடமராட்சி, ஜன 24

யாழ்ப்பாணம் வந்துள்ள வடபகுதி புனரமைப்பு செயற்திட்ட நிபுணர் குழுவினர் வடமராட்சிப் பகுதியில் ஏற்பட்ட சேதங்களை நேற்றுப் பார்வையிட்டனர்.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் சகிதம் வந்த இக்குழுவினர் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் அனைத்தையும் பார்வையிட்டதோடு, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினர்.

வடமராட்சிப் பகுதியில் அதிக சேதங்களுக்குள்ளான பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களை இக்குழுவினர் மிக நுணுக்கமாக பார்வையிட்டனர்.

வடமராட்சிக்கு வருவதற்கு முன்பதாக இக்குழுவினர் நிலாவரைக்குச் சென்றிருந்தனர். [அ-173]

## புதிய அரசமைப்பு நகல் திட்டம் அமைச்சர் பீரிஸ் வெளியிட்டார்

கொழும்பு, ஜன. 24

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்ட தற்போதைய அரசமைப்பை நீக்கி —

நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லக் கூடிய பிரதமர் தலைமையின் கீழான ஆட்சி முறையை ஏற்படுத்தும் புதிய அரசமைப்புக்கான நகல் திட்டத்தை நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நேற்று வெளியிட்டார்.

புதிய அரசமைப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இந்த நகல் திட்டத்தை அரசு கடந்த வியாழனன்று கையளித்திருந்தது.

இத்திட்டம் தொடர்பாக மக்களின் கருத்தை அறிவதற்காக அது நேற்று அமைச்சரினால் பகிரங்கமாக வெளியிடப்பட்டது.

53 பக்கங்களைக் கொண்ட அந்த நகல் திட்டத்தில் உள்ள முக்கிய அம்சங்கள் சில வருமாறு;-

★ நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை இல்லாது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பரவலாக்கல் பற்றி எதுவும் புதிய அரசமைப்பு நகலில் இல்லை!

கொழும்பு, ஜன. 24

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு வெளியிட்டுள்ள உத்தேச அரசமைப்பு சீர்திருத்த நகல் சட்டத்தில் —

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் குறித்து எந்தவித யோசனைகளும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விடயங்களை உத்தேச அரசமைப்பு நகல் சட்டத்தில் சேர்ப்பது குறித்து, அரசமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்து வருவதாக அமைச்சர்பீரிஸ் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களின் பின்னர் காணப்படுகின்ற தீர்வுத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அவற்றை அரசமைப்பில் சேர்க்க வேண்டியிருக்கும் என்றும் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அலரி மாளிகைக் குண்டு குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள்

கொழும்பு, ஜன 24

ஜனாதிபதி சந்திரிகா தற்போது தங்கியிருக்கும் அலரி மாளிகையில் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டது குறித்து முரண்பாடான செய்திகள் வெளியாகியிருப்பது கொழும்பில் பலத்த சர்ச்சை ஏற்படுத்தியுள்ளது.

வெடிப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது பற்றிய செய்தி கடந்த 18ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியானதை அடுத்து, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் தனித்தனியாக அறிக்கைகளை வெளியிட்டனர். ஆனால் இந்த அறிக்கைகளில் ஒன்றுக்கு ஒன்று முரணான பல விடயங்கள் இடம்பெற்றிருப்பது பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்குள் குண்டு கண்டுபிடிக்கப்படவில்லை என்றும்—

அவ்வாறு வெளியான செய்திகள் தவறானவை என்றும்—

அலரி மாளிகைக்குப் பாதுகாப்புக் கடமைக்காக வந்த சிப்பாயின் பயணப் பைக்குள் இருந்த வெடிப்பொருள் மாளிகை வசாலில் வைத்தே கண்டுபிடிக்கப்பட்டு விட்டது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள், தளபதிகள் போன்ற பிரமுகர்களின் வாகனங்களில் மட்டுமே கறுப்புக் கண்ணாடி பொருத்தமுடியும்

கொழும்பு, ஜன 24

அமைச்சர்கள் மற்றும் படைத் தளபதிகள் பயன்படுத்தும் வாகனங்களில் மட்டுமே நிழற்படுத்தப்பட்ட — கறுப்பு நிற — கண்ணாடிகள் பொருத்தப்பட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புக்கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனங்களை வைத்திருக்கும் ஏனையோர் அவற்றை அகற்றுவதற்கு இம்மாதம் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாகவும் —

அதற்குப் பின்னர் இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இத்தகைய கண்ணாடிகள் பொருத்தப்பட்ட 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் இருந்து நிழற்படுத்தப்பட்ட கண்ணாடிகளை பொலீஸார் அகற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் —

வாகனங்களில் இருந்து கறுப்புக் கண்ணாடிகளை அகற்ற பொலீஸார் எடுக்கும் நடவடிக்கை அநாவசியமானது; அநீதியானது; இயற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களைத் திருப்பி வழங்காத அரசியல்வாதிகள் மீது விசாரணை

கொழும்பு. ஜன. 24

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட சுமார் ஆயிரத்து 300 ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்காத அரசியல்வாதிகள் மீது விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது

குற்றத்தடுப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் இக்னேஸியஸ் கனகரத்தினம் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஐ. தே க ஆட்சிக் காலத்தில சுமார் 2 ஆயிரத்து 500 ஆயுதங்கள் இவ்வாறு அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்களின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்டிருந்தன.

அவற்றில் சுமார் ஆயிரத்து 300 ஆயுதங்களுக்கு என்ன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உபகரணங்கள் யாவும் வந்து சேர்ந்தாலும்

# குடாநாட்டிற்கு மின் இணைப்புக் கிடைக்க குறைந்தது 10 மாதங்களாவது செல்லுமாம்!

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு. உடனடியாக மின்சார விநியோகம் கிடைக்கும் சாத்தியம் இல்லை என்று மின்சார சபையின் யாழ். அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆகக் குறைந்தது பத்து மாதங்களாவது தேவை என்று அவர்கள் விளக்கினர்.

வடக்கிற்கு மின்சாரம் விநியோகிப்பதற்கு[illegible] சுளை நேற்று முதல் ஆரம்பிக்குமாறு [illegible] சக்தி அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்த கொழும்பில மின்சார சபை அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியிருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக யாழ். அலுவலக அதிகாரிகளிடம் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து கிளி[illegible] — பெரும்பாலும் புதுவருடத்[illegible] — மின்சாரம் கிடைக்[illegible] வாய்ப்பு உண்டு — என்று தெரிவிக்கப்பட்டது.

மின்விநியோகம் தொடர்பாக, மின்சார சபையின் யாழ். அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான பகுதிகளில் சேதமடைந்த 15 மின் கோபுரங்களை சரி செய்வதற்காக, பளை, கொடிகாமம் பகுதிகளில் இருந்து மின் கோபுரங்களை எடுத்துச் சென்று சரி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

யாழ் மாவட்டத்துக்கு கிளிநொச்சியில் இருந்து மின் இணைப்பைச் செய்வதற்கு நூற்றுக்கும் மேற்பட்ட மின் கோபுரங்கள் தேவை

அவை வந்து சேர்ந்த பின்னர், அவற்றை நட்டு சரி செய்ய ஆகக் குறைந்தது ஆறு மாதங்களாவது செல்லும்.

மேலும் குடாநாட்டில் உள்ள 'ரான்ஸ்போமர்களை' திருத்தவு' மாதக்கணக்கில் காலம் எடுக்கும்.

இருந்த. நிர்மாண வேலைகளுக்குத் தேவையான சகல உபகரணங்களும் வந்து சேரும் பட்சத்திலும் யாழ்ப்பாணத்துக்கு மின்சார இணைப்புப் பெற ஆகக் குறைந்தது பத்து மாதங்களாவது செல்லும் — என்று விவரிக்கப்பட்டது

(அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் அரசடி வீதியில், தஞ்சி ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இல. 83, அரசடி வீதியில் தொடர்பு கொள்ளவும். (34826)

மிகவும் நல்ல நிலையிலுள்ள R.A. Lister 8 H P. England, இரு மில் என்ஜின்கள் விற்பனைக்குண்டு தொடர்பு; எஸ். இந்திரன், மே/பா சிவராஜா, யோகமாளிகை, வல்வை வீதி, சங்கானை. [34803]

## தேவை

அப்பம், றொட்டி மற்றும் போளி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை. நேரில் வரவும். ரவர் கோப்பி அன் கூல்பார், 324, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (சி-312)

## ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

## POLITICAL SCIENCE

G. C E. A/L and B. A. இலங்கையின் தேர்தல்கள், 94 பொதுத்தேர்தலும், சிறுபான்மை இனங்களும், இலங்கையின் அரசியல திட்ட வளர்ச்சி தெரிவு செய்யப்பட்ட நாடுகள், கட்சிமுறைகளும், உள்ளூராட்சி முறைகளும் வெளிநாட்டு கொள்கைகளும் இவ் ஐந்து புத்தகங்களின் ஆக்கம்: பீ. எம். புன்னியாமீன் B. A. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-295)

## தட்டச்சு யந்திரம்

புதிய Keyboard தமிழ் Typewriter தேவை. தொடர்பு கொள்க School of Business Administration, 16, 3Rd, Cross Street, Jaffna. [சி-410]

## மாணவர் உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஜன. 24 'கோமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ள மாணவர்களுக்கான மேலதிக உணவு முத்திரைகள் யாழ். செயலகத்திற்கு வந்துசேர்ந்துள்ளன. (ஓ-17)

## கிணற்றில் விழுந்து பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 24 நவாலியில் நேற்று முன் தினம் மாலை பெண் ஒருவர் கிணற்றில் விழுந்து மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த பொன்மலர் (43வயது) என்ற அந்தப் பெண், கிணற்றடிக்குச் சென்ற சமயம் வலிப்பு ஏற்பட்டு, கிணற்றுள் விழுந்து மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-20)

---


# கொடிதினம்

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்
தன் நற்பணி தொடர
"உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்"
[சி-422]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 11 — 1920



மறைவு: 02 — 02 — 1994

**அமரர் விநாசித்தம்பி ஆறுமுகம்**
*(பிரபல வர்த்தகர், குளியாப்பிட்டி)*

திதி: 24 – 01 – 1995

தாங்கள் அமரராகி ஓராண்டு சென்றாலும், நாம் என்றும் உங்கள் நினைவலைகளிலே வாழுகின்றோம். எம் நெஞ்சமெல்லாம் நீங்கள் நிறைந்திருக்கின்றீர்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[34781]

---

# 35ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**கணபதிப்பிள்ளை குமரகுரு**

மண்ணில்: 13–10–1911
விண்ணில்: 21–12–1994

*தீதி நிருணய வெண்பா*
மன்னுநற் பாவாண்டு மார்கழித் தேய்பிறையில்
துன்னுஞ் சதுர்த்திவரு பூசநாள்-இன்மொழி சேர்
ஏந்தல் குமரகுரு இப்புவியை விட்டகன்று
போந்தான் இறைவனடிப் போது.

இன்று நிகழும் அந்தியேட்டியிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவியும், பெறாமக்களும்.
பேரப்பிள்ளைகளும்.

தோப்புக்காடு,
காரைநகர்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

[34825]

---

# யாழ். றோட்டறிக் கழகம் நடத்தும்

சர்வதேச றோட்டறியின்
## 90ஆவது ஆண்டு நிறைவு தமிழ் / ஆங்கில
# கட்டுரைப் போட்டி

*சர்வதேச றோட்டறியின் 90ஆவது ஆண்டு நிறைவையொட்டி*
பாடசாலை மாணவர்களுக்கான
*தமிழ், ஆங்கில கட்டுரைப் போட்டிகளை எமது யாழ். றோட்டறிக்கழகம் நடத்தவுள்ளது.*

**தலைப்பு தமிழில்:**
1. றோட்டறி - நட்பின் அடிப்படையில் சேவை.
2. ஈழத்தில் சமூக சேவை – றோட்டறிக் கழகத்துக்குச் சில ஆலோசனைகள்.
3. பொது வாழ்வின் அடிப்படை இலட்சணங்கள்.

**ஆங்கிலத்தில்:**
1. Rotary - Service based on Friendship.
2. Peace - The role of Rotary.
3. Youth Exchange and International Understanding.

**போட்டி விதிகள்:**
- 14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.
- கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சில் பொறித்து அனுப்பப்பட வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பன தனித் தாளில் எழுதப்படுவதுடன், கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பாடசாலை அதிபர் அல்லது உப அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1995 பெப்ரவரி 6ஆம் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க்கண்ட முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
- தமிழ், ஆங்கில கட்டுரைகளில் தனித்தனியே முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகளுக்கான தங்கப்பதக்கப் பரிசில்கள் 90ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் "சர்வதேச றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவு கட்டுரைப் போட்டி" Essay Contest for 90th Anniversary of Rotary International" என கடித உறையின் இடதுபக்க மேற்புறத்தில் குறிப்பிடப்பட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
- போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்;

தலைவர்
*யாழ். றோட்டறிக் கழகம்,*
*292/2, நாவலர் வீதி.*
*யாழ்ப்பாணம்.*

(சி 421)

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்
## 1995 ஆம் ஆண்டிற்கான
# கேள்வி அறிவித்தல்
## இணுவில் ஆட்டிறைச்சிக் கடை

மேற்படி கேள்வியின் பொருட்டு 'உதயன்' பத்திரிகையில் 31-10-94 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைவாக, இணுவில் ஆட்டிறைச்சிக் கடைக்கான கேள்விகள் மீண்டும் கோரப்படுகின்றன. இதற்கான கேள்விப்பத்திரங்கள் 02-02-95 ஆம் திகதி பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

03-02-95 பகல் 12-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் பி. ப. 2-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் சகல கேள்விக்காரர்களையும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

| | படிவம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| இணுவில் ஆட்டிறைச்சி கடை | 50/- | 500/- | 70,000/- |

ஆ. மகாலிங்கம்
*விசேட ஆணையாளர்,*
*வலிகாமம் தெற்கு பிரதேச சபை.*

வ. தெ. பி. ச.,
சுன்னாகம். 19-01-95 [சி-5771]

---

# கண்ணீர் அஞ்சலி

யா/மல்லாகம் மகாவித்தியாலய முன்னாள் அதிபர்
**உயர்திரு அ. மகாதேவன்**
அவர்கள்

23 – 01 – 1995 இல் காலமானார். அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(7871)

---

## ஆசிரியருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 24 தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழன் பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஜ]

---

மானிப்பாய் கோவில்பற்று
லயன்ஸ் கழகம்
## வசதி குறைந்தோருக்கான
# கண் சத்திர சிகிச்சை

கண்ணில் பூப்படலம் (Cataract) வளர்ந்த நோயாளரை சத்திர சிகிச்சைக்குத் தெரிவு செய்வதற்கான ஆரம்ப பரிசோதனை.

இடம்: மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியாலை
காலம்: 27 — 01 — 1995 வெள்ளி காலை 7-30 மணி

★ கற்றறக் (Cataract) எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள 55 வயதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் 26 – 01 – 1995 வியாழக்கிழமை 3-00 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தங்களை பதிவு செய்து கொள்ளவும். ஏற்கனவே பதிவு செய்தவர்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவை இல்லை.

செயலாளர்,
*மானிப்பாய் கோவில்பற்று.*
லயன்ஸ் கழகம்.

*விளம்பர அன்பளிப்பு:*




[சி-313]

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும்
எமது சங்கத்தின் போசகருமாகிய
**அ. மகாதேவன் B. A.**
*அவர்கள் 22 - 01 - 95 இல் சிவபதமடைந்தார்*

அன்னாரின் மறைவினால் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகிறோம். அன்னாரின் பிரிவா துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா / மல்லாகம் மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கம்

[சி-5772]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி

*மீசாலை கிழக்கைச் சேர்ந்தவரும்,*
*மீசாலை கிழக்கு கிராம உத்தியோகத்தருமான*
**திரு. நாகலிங்கம் பரமசிவம்**
*அவர்களின் அன்புத் தாயாரான*
திருமதி
**நாகலிங்கம் அன்னப்பிள்ளை**

25-12-94 ஆம் திகதி சிவபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்திற்கு எமது சங்கம் சார்பாக கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்,
*நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்,*
*சாவகச்சேரி*

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
18-01-1995. (34817)

---

# ஓராண்டு நினைவலைகள்

அமரர்
**இராமச்சந்திர ஐயர் இராசலட்சுமி அம்மா**
*(சின்னக்குரு அம்மா - சாரதாபீடம்)*

தோற்றம்: 10–07–1938
மறைவு: 03–02–1994

*திதி:* **24·01·1995**

ஓராண்டு ஒரு இமைப்பொழுதில் ஓடி மறைந்ததம்மா
உங்கள் முகம்காண எங்கள்மனம் அலைமோதுதம்மா
பல்லாண்டு காலம் வாழவேண்டிய தெய்வம் நீங்கள்
நாங்கள் எப்பிறப்பில் காண்போம் உங்கள் திருமுகத்தை.

*நினைந்துருகும்:*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
*சாரதாபீடம் குடும்பத்தினர்.*

*சாரதாபீடம்,*
*துன்னாலை,*
*கரவெட்டி.* (8209)

---


# கல்வியின் கருவூலம் மட்டுமல்ல; பண்பின் விளைநிலமும் இதுதான்!

க.பொ.த சாதாரணதரம்
பகல் முழுநேர வகுப்பு
# யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: **27-01-1995** காலை **8.30** மணி
(சி/419)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## விழிப்பு வேண்டும்

போர்க் காலத்திலே நாங்கள் விழிப்பாக இருந்தது போல, சமாதானம் என்று கூறப்படும் இவ்வேளையிலும் நாங்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும். சமாதானம் என்று கூறி நாம் ஏமாற்றப்படக்கூடாது.

இவ்வாறு தமிழ் மக்களை எச்சரித்திருக்கிறார் அருட்கலாநிதி எஸ். ஜே. இமானுவேல் அடிகளார்.

கடந்த காலச் சரித்திரங்கள் எங்களுக்கு எத்தனையோ உண்மைகளைக் கற்பித்திருக்கின்றன. அதன் காரணமாக போர்க் காலத்திலும் பார்க்க இன்று நாங்கள் கூடிய விழிப்புடன் செயற்பட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றும் அவர் சரியான அறிவுறுத்தலை வழங்கி உள்ளார்.

அடிகளார் ஓர் அரசியல் வாதியல்லர்; சமயத் தலைவர்களில் ஒருவர். ஆனால் காலத்திற்கு ஏற்ற கருத்தை வெளியிட்டுள்ளார். ஆகையால் அது கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடந்த ஐம்பது வருட காலமாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுண்டு. ஆனால் எதுவுமே வெற்றி அளித்தது இல்லை. பல தடவைகள் தமிழர்களாகிய நாம் ஏமாற்றப்பட்டோம். பல தடவைகள் நாம் நம்பி ஏமாந்தோம்.

இதனை தமிழர்களில் பெரும்பாலானவர்கள் மறக்கவில்லை. அதேவேளை ஏமாற்றப்பட்டதையும், ஏமாந்ததையும் மறந்துபோன ஒரு சிலரும் இல்லாமலும் இல்லை.

அரசாங்கம் பிரச்சினையைத் தீர்ப்பதாக சொல்கிறது. சமாதானத்தை உண்டாக்குவதாகக் கூறுகிறது. ஆகையால் அரசினை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்; அதற்கான ஆதரவையும், ஒத்துழைப்பையும் கண்ணை மூடிக்கொண்டு வழங்கவேண்டும் என்று வசதி விரும்பும் ஒரு சிலர் கருதக்கூடும்.

அவர்களை மனதிற்கொண்டே அடிகளார் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார். இம்முறையும் நாம் ஏமாந்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் புதிய அரசாங்கம் ஆர்வமாக உள்ளது; அக்கறையாக உள்ளது என்பது உண்மைதான். முந்திய காலங்களைப் போல தமிழர்களை இலகுவில் ஏமாற்ற முடியாது என்பதனையும் அரசு நிச்சயம் புரிந்திருக்கும். தமிழர்கள் மிகப் பலமான நிலையில் நின்றே பேச்சுவார்த்தைக்கு இணங்கியிருக்கிறார்கள் என்பதனையும் அரசு உணராமல் இருக்க நியாயமில்லை.

அப்படியிருந்தபோதிலும், பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதில் அது மெது மெதுவாகவே நகர்கிறது. அதன் அணுகுமுறையும், செயற்பாடும் சீராக இல்லை. ஆரம்பத்திலிருந்தே நம்பிக்கையின்மையை உண்டாக்குவனவாகவே அரசின் செயற்பாடுகள் அடுத்தடுத்து அமைந்துள்ளன.

இவற்றைப் பயன்படுத்தி தெற்கில் உள்ள தீயசக்திகள் அரசின் சமாதான முயற்சிகளையும், பேச்சுவார்த்தையையும் குழப்பிவிடும் ஆபத்து உண்டு. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசின் மெதுவான நகர்வு, தீயசக்திகளுக்கு அளிக்கப்படும் நல்ல வாய்ப்பு என்பதனை அரசு கவனத்தில் எடுப்பதாக இல்லை.

சந்திரிகா நல்மனதோடு, உண்மையான விருப்பத்தோடு, நேர்மையாக செயற்படலாம். ஆனால் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை விரும்பாத சக்திகள் கைகட்டிக் கொண்டு வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கமாட்டா.

எனவே எங்களது உரிமைகள் கைக்குக் கிடைக்கும் வரை, நாம் விழிப்பாக இருக்க வேண்டும். தீர்வை விரும்புகிறோம், சமாதானத்தை விரும்புகிறோம் என்பதால் ஏமாந்து போகத் தயாராக இருக்கிறோம் என்று எவரும் கருதும் விதத்தில் சோர்ந்து விடக்கூடாது. கண்களை எப்போதும் அகல விரித்துக் கொண்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சமாதானம், தீர்வு என்ற சொற்களைக் கேட்டு மதி மயங்கி விடக்கூடாது.

# உலக வங்கியின் தாளத்துக்கு ஏற்ப புதிய அரசு ஆடுகிறது!

### தென்மாகாணசபை அமைச்சர் கண்டனம்

மாத்தறை, ஜன. 24

உலக வங்கியின் தாளத்திற்கு ஏற்ப ஆட்டம் போடமாட்டோம் என உறுதி அளித்தது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம். ஆனால் இன்று வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு விட்டது. உலக வங்கியின் தாளத்துக்கு முற்றுமுழுதாக ஆட்டம் போட்டு வருகிறது அரசு. இது வருத்தத்துக்குரிய செயலாகும்.

தென்மாகாண சபை தகவல், கிராம அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சரும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான டெனிஹித்தட்டியகே அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1948க்குப் பின்னர் அதிகாரத்தில் இருந்த எந்த ஓர் அரசாங்கத்தை விடவும் அதிக அளவில் இன்றைய அரசு உலக வங்கிக்கு அடிமையாகிச் செயற்படுகிறது.

இந்த நிலையில், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் இடதுசாரிக் கட்சிகள் இதுவரை ஏன் மௌனமாக இருக்கின்றன?

— இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார். [க]

# கடல் உணவு வகைகள் மீண்டும் தென்பகுதிக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 24

குடாநாட்டில் இருந்து மீண்டும் தென்பகுதிக்கு கடல் உணவு வகைகள் அனுப்பப்படுகின்றன.

சிங்கறால். பெருங்கால் நண்டு மற்றும் கடல் அட்டை போன்றவற்றை அனுப்புவதில் இப்போது மும்முரம் காட்டப்பட்டு வருகிறது.

உள்ளூர் சந்தைகளிலும் இந்த வகையான கடல் உணவுகள் விற்பனைக்கு வந்துள்ளன. பொதுமக்கள் ஆர்வத்துடன் இவற்றை வாங்குவதை காணக்கூடியதாக இருக்கின்றது. (ஒ-17)

## தீவிரவாதி சுட்டுக்கொலை

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இருவர், தொழிற்சங்கவாதி ஒருவர், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் உட்பட சுமார் நூறு பேரின் கொலைகள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சீக்கியப் பிரிவினை வாதக் குழுவான பார்பர் கலசா கவச குழுவின் தலைவரான திடார் சிங் கடந்த வாரம் நிட்சாரில் மறைவிடம் ஒன்றில் பதுங்கியிருந்த போது பொலீஸாரால் கொல்லப்பட்டார்.

இவரது தலையைக் கொண்டு வருமவர்களுக்கு 1இலட்சத்து 67 ஆயிரம் டொலர் பரிசு அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

# அலரி மாளிகையின் உள்ளே வாகனம் செல்லத் தடை!

### அமைச்சர்களும் போக முடியாது

கொழும்பு, ஜன. 24

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வாசஸ்தலமான அலரிமாளிகை பகுதிக்குள் அமைச்சர்கள் கூடவாகனங்களில் செல்ல முடியாது.

அலரிமாளிகையில் கடந்த வாரம் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இந்த தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதே வேளை, அலரிமாளிகையில் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ 3)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேரடியாகவும் விளக்கம் பெறும்

கொழும்பு, ஜன. 24

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எழுத்துமூலம் யோசனை தெரிவித்தவர்களை நேரில் அழைத்து வாய்மூலம் சில விளக்கங்களை குழுபெறவிருக்கிறது.

இதற்கான முடிவு கடந்த வாரம் நடந்த தெரிவுக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக தெரியவந்தது.

இந்தத் தெரிவுக்குழுவுக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத சில கட்சிகளும், யோசனைகளை சமர்ப்பித்துள்ளன.

இந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வாய்மூல விளக்கத்துக்கு அழைக்கப்படவிருக்கின்றனர்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெற்றுள்ளதால் அவர்களின் விளக்கங்களை நேரடியாகப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

# அரசியலில் ஆர்வம் ஏதும் சோனியாவுக்கு இல்லை

''சோனியா காந்திக்கு அரசியலில் ஆர்வம் இல்லை. அவரது பெயரை அரசியல் முரண்பாடுகளில் சம்பந்தப்படுத்த வேண்டாம்.''

நேரு குடும்பத்தின் நீண்டகால நண்பரும் காங்கிரஸ் எம். பி. யுமான முகம்மது யூனுஸ் இவ்வாறு புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

''நானோ எனது குழந்தைகளோ அரசியலில் சேருவதைவிட டில்லித் தெருக்களில பிச்சை எடுக்கத் தயார் என்று சோனியா காந்தி என்னிடம் கூறினார்'' என்றும் அவர் கூறினார். [க]

## புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு:

# இடம்பெயர் சேவை வவுனியா நகரில்

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் இடம்பெயர் சேவை ஒன்று எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் வவுனியா நகரில் நடைபெறவிருக்கிறது.

வவுனியா மாவட்டத்தின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உடன் தீர்த்துவைக்கும் நோக்கிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இடம் பெயர்சேவை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பிரதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள் பலரும் இந்த இடம்பெயர் சேவையில் பங்குபற்றுவர். [ஒ 3]

# ராவின் கொடும்பாவி மதுரையில் எரிப்பு!

மதுரை, ஜன. 24

மதுரையில் பிரதமர் நரசிம்மராவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. இது தொடர்பாக வாழப்பாடி ராமமூர்த்தியின் ஆதரவாளர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்தனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து வாழப்பாடி நீக்கப்பட்டதை எதிர்த்தே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக அறியவருகிறது.

மதுரை 23ஆம் வட்ட காங்கிரஸ் செயலாளர் ரங்கநாதன் மற்றும் 7 பேர் ஒட்டோக்களில் வந்து மதுரை கட்டபொம்மன் சிலை அருகே இறங்கி நரசிம்மராவ் கொடும்பாவியை எரித்தார்கள்.

இவர்களைப் பொலீஸார் பிடிக்க முயன்றனர். அப்போது ரங்கநாதன் மட்டுமே பிடிபட்டார். மற்றவர்கள் தப்பி ஓடிவிட்டனர். (க)

# குருநகர் மீன் வாடிக்கு படையெடுக்கும் மக்கள்!

குருநகர், ஜன. 23

கடல் உணவுப் பொருள்களான மீன், இறால், கணவாய், நண்டு போன்றவற்றின் விலைகள் பெருமளவில் குறைந்துள்ளன.

இதன் காரணமாக குருநகர் மீன் சந்தைப்படுத்தும் வாடிக்கு பெருமளவில் மக்களும், வியாபாரிகளும் படையெடுப்பதைக் காண முடிகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக கடல் உணவுகளின் விலைகள் கட்டுப்பாடற்ற அளவுக்கு உயர்ந்திருந்தது.

படையினரின் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக கடற்றொழிலாளர்கள் ஆழ்கடல் பிரதேசங்களுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுவதனால் கடல் உணவுகள் மீன்வாடிகளில் அதிகப்படியாக கொண்டுவரப்பட்டு குறைந்த விலைகளில் சந்தைப்படுத்தப்படுகின்றன. (ஒ-51)

## றோட்டரக்ட் கருத்தரங்கு

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினர் றோட்டரி விழிப்புணர்ச்சி மாதத்தை ஒட்டி ஏற்பாடும் செய்துள்ள கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். யாழ். றோட்டரிக் கழகத்தின் செயலாளர் ரொட்டேரியன் ரி. திருநந்தகுமார் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்குவார். (க)

## புலிகளின் குரல் வானொலியில்

24 — 01 — 1995

செவ்வாய் இரவு

- ★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 – அறிந்துகொள்ளுங்கள் — தகவற்களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா?— 'சக்திக் குறைபாட்டால் ஏற்படும் பிரச்சினைகள்'— வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய 'புனரமைப்பு'
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

25 — 01 — 1995

புதன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

செவ்வாய் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர் — இசையமைப்பாளர் அருளாவுடன் செவ்வி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

# கண்காணிப்புக் குழுக்களுக்கு இதுவரை முறைப்பாடு ஏதுமில்லை

கொழும்பு, ஜன. 24

அரசுப்படைகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த 8 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்த மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை மீறியதாக எந்த வித முறைப்பாடுகளும், கண்காணிப்புக் குழுக்களுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பை கண்காணிக்க வெளிநாட்டு பிரதிநிதிகள் கொண்ட கண்காணிப்புக் குழுக்களில் இரண்டு குழுக்கள் மட்டக்களப்பு- அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் செயற்பட்ட போதும்—

உடன்பாட்டை மீறியதாக எந்தவித முறைப்பாடும் நேற்று முன்தினம் வரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கான கண்காணிப்புக் குழுக்கள் இன்னும் செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# அசம்பாவிதங்கள் இன்றி மோதல் தவிர்ப்பு நீடிப்பு

### இராணுவ உயர் அதிகாரி தகவல்

கொழும்பு, ஜன. 24

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான எழுத்து மூலமான இருவார கால மோதல் தவிர்ப்பு உடன்பாடு நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த போதும்—

யாழ்ப்பாணத்தில் நடந்த மூன்றாம் கட்டப் பேச்சின் போது இணக்கம் காணப்பட்டவாறு, இந்த மோதல் தவிர்ப்பு தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போர் முனைகளில் சிறு அசம்பாவிதங்கள் கூட இல்லை என்றும்—

நாமும் (படையினரும்) விடுதலைப் புலிகளும் உடன்பாட்டின் பிரகாரம் மோதல் தவிர்ப்பை நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்றும்— அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# வாழ்வகம் கொடி தினம்

யாழ்ப்பாணம், ஜன. 24

உடுவில் ''வாழ்வகம்'' விழிப்புல வலு விழந்தோர் இல்லத்தினர் இன்று கொடி தினத்தை யாழ். வட்டலியோ கழகத்தின் அனுசரணையுடன் நடத்தவுள்ளனர்.

விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தின் செயற்பாடுகளுக்காகவும், அதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவும் கொடிதினம்நடத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# வவுனியாவில் இருந்து வடக்கே பாதயாத்திரை

### ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஏற்பாடு

கொழும்பு, ஜன. 24

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும் எனக்கோரி ஸ்ரீலங்கா மக்கள் கட்சி (வை. பி. டி. சில்வா பிரிவு) அடுத்த மாதம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பாதயாத்திரை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

பொ. ஐ. மு. தேசியப்பட்டியல் எம்.பியும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளருமான வை. பி. டி. சில்வா இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அடுத்தமாதம் 16ஆம் திகதி ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஸ்தாபகர் விஜயகுமாரணதுங்காவின் நினைவு தினமாகும்.

அதே சமயம் கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 20ஆம் திகதி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ஒ-ஐ)

# ஆத்மாவையும் பரமாத்மாவையும் இணைக்கும் தெய்வீக கலை சங்கீதம்

### தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 24

சங்கீதம் ஆத்மாவையும் பரமாத்மாவையும் இணைக்கும் ஒரு தெய்வீகக் கலை. இளந்தலை முறையினர் தமது திறமையை விருத்தி செய்ய இது போன்ற கலைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் தலைமை உரை நிகழ்த்திய வலயம் 1 கல்விப் பணிப்பாளர் செல்வி இ. பெரியதம்பி கூறினார்.

நல்லை ஆதீன கலா மண்டபத்தில் வட இலங்கை சங்கீத சபையின் ஆதரவில் 21ஆம், 22ஆம் திகதிகளில் சற்குரு தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா நடைபெற்றது.

செல்வி பெரியதம்பி மேலும் பேசும் போது கூறியதாவது.

வட இலங்கை சங்கீத சபை ஆசிரிய தரம் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு சங்கீத வித்தகர் பட்டம் வழங்கப்படுகிறது. இது மிக உயர்ந்த தரம் மிக்கது. இந்தப் பட்டங்களின் ஊடாக இளந்தலைமுறையினர் தொழில் வசதிகள் பெறவும் வாய்ப்புகள் உண்டு. கடந்த வருடம் நடைபெற முடியாது போன ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை மிகக் குறுகிய கால அவகாசத்தில் சிறப்பாக நடைபெறுவது இளஞ்சந்ததிக்குக் கிடைத்த பேறாகும். இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் பேசும்போது கூறியதாவது:

உஞ்சவிருத்தி பிராமணராக வாழ்க்கையை நடத்திய தியாகராஜ சுவாமிகள் சங்கீதத்தைப் பக்தி என்னும் தேனில் குழைத்து வழங்கினார். அ[illegible] ஆயிரம் கீர்த்தனைகளில் எமக்குக் கிடைக்கப் பெற்றது ஆயிரம் கீர்த்தனைகள் மட்டுமே. வால்மீகி இராமாயணமும் இருபத்திநான்காயிரம் பாடல்களைக் கொண்டது. தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இசை உலகம் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரையும் இடம்பெற்றது

தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தின ஆராதனையில் முதுபெரும் இசைக் கலைஞர்களும் இளம் கலைஞர்களும் கலந்து சிறப்பித்தனர்.

வட இலங்கை சர்வோதயத் தலைவர் திரு. க. திருநாவுக்கரசு, வர்த்தகர், திரு. பேரம்பலம் நாகரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி, [illegible] மங்கள இசையும் இடம் பெற்றது. [க-111]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷமிகளின் செயல் காரணமாக

# மாநகர மரம் நடுகை இடை நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ் மாநகரப் பகுதியில் உள்ள வீதிகளில் மரம் நடும் திட்டத்தை யாழ். மாநகராட்சி மன்றம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

வீதிகளில் நடும் மரங்களையும் அவற்றின் கூடுகளையும் விஷமிகள் அபகரித்துச் செல்வதாலேயே இத்திட்டத்தை மாநகராட்சி மன்றம் கைவிட்டுள்ளது.

இதற்குப் பதிலாக யாழ். மாநகரப் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானங்களில் பொதுமக்களின் உதவியுடன் மரங்களை நடுவதற்குத் திட்டமிட்டு வருவதாக மாநகர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-17)

# வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசு தீர்வை முன்வைக்க வேண்டும்

### வாசுதேவ கருத்து

கண்டி, ஜன. 24

வடக்கு-கிழக்கு பிரச்சினை எமது தேசியப் பிரச்சினையாகும். இப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பெரும்பான்மை மக்களே முன் நிற்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறினார்.

கண்டி சம்பத் மண்டபத்தில் சமாதானக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதானத்தை வலியுறுத்தும் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு தான் தீர்வினை முன்வைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (க)

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் ஆறுமுகம்

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும், இலக்கம் 83, கோணாவில் அக்கரையான் குளத்தை வசிப்பிடமாகவும், கொண்ட தில்லையம்பலம் ஆறுமுகம் 21-1-1995 இல் காலமானார்.

இவர் பாறுவதியின் அன்புக் கணவரும், சிவக்கொழுந்துவின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியத்தின் அன்பு மாமனாரும், குகநேசபவான், திரவியபவான், பவளமலர், கோணேசலிங்கன், குணமலர், பிறைசந்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கோணாவிலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி. தி. பவளமலர்
(பேர்த்தி)

அம்பாள் அகம்,
தபாற் கந்தோர் வீதி,
இருபாலை,
கோப்பாய். (34832)

## சி. சுப்பிரமணியம்

சேர்மணியம் என அன்பாக அழைக்கப்படும் திரு. சி. சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற M. S O. பிரதம அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்) 20-01 95 வெள்ளிக்கிழமை காலை காலமானார். அன்னார் அமரர்களான சின்னட்டியர், ஆச்சிமுத்து தம்பதிகளின் இளைய மகனும், கொழும்புத்துறை மேற்கு பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த அமரர்களான சிற்றம்பலம்-அன்னமலர் தம்பதிகளின் முத்த மருமகனும், புனிதவதியின் (மணியக்கா) கணவரும் சிவசாந்தி, ஸ்ரீகோபால் (U K.) சிவரஞ்சினி (Canada) ரோகிணி ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கவேல், கணேசலிங்கம்(Canada), இந்திராணி (ஆசிரியை சர்வோதயா, அல்வாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியா, லக்சிகா, கார்த்திகா ஆகியோரின் பாசமுள்ள பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினமே மாலை 5-00மணிக்கு நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் முன்னேற்பாடாக அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். மன்னிக்கவும்.

தகவல்:
திருமதி சு, புனிதவதி

இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி, (34828)

## மிக்கேல்பிள்ளை பெனடிற் ஞானகுலேந்திரன் (குலம்)

(மயிலிட்டி)

மயிலிட்டியைச் சேர்ந்த மிக்கேல்பிள்ளை பெனடிற் ஞானகுலேந்திரன் 16 - 01 - 95 அன்று லண்டனில் காலமானார். இவர் பஞ்சாட்சரரூபயின் [பவானி] அன்புக் கணவரும், கெவின், ஷிவோண் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மிக்கேல்பிள்ளை [மயிலிட்டி மிக்கேல்பிள்ளை அன் சன்ஸ் உரிமையாளர்], திருமதி சிசிலியா ஆகியோரின் இளைய புதல்வரும், ஞானமலர், ஞானப்பிரகாசம், ஞானரஞ்சிதம், ஞானரட்ணம், ஞானானந்தம் [நோர்வே] ஞானாமிர்தம், ஞானகுணரட்ணம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் திரு. எஸ். குமாரசுவாமி, திருமதி கமலாம்பிகை குமாரசாமி ஆகியோரின் அருமை மருமகனும், மனுவேல்பிள்ளை, செல்வராணி, காலஞ்சென்ற இம்மானுவேல், பிலிப் [உணவுத் திணைக்களம்), குமாரி [நோர்வே] தேவசகாயம் [ஒலிவன்ற் எஸ்ரேற்], கமலேஸ்வரி [ஜேர்மனி], சரோஜினிதேவி, சரஸ்வதிதேவி, சற்குணதேவி [பிரான்ஸ்], சூரியகுலசிகாமணி [பிரதேச செயலகம் — சங்கானை], கணேசபகவான் [பிரான்ஸ்] ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்வதுடன் அவரின் ஆன்ம சாந்திக்காக 25 - 01 - 95 [நாளை] புதன்கிழமை காலை 7.30 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கலமாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியிலும் அதைத்தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் தேநீர் விருந்திலும் பங்கு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி ஞானறட்ணம் பிலிப்
பொன்மணி — சகோதரி

திருமதி ஓர்த்தம்மா ஞானப்பிரகாசம்,
மேற்பார்த்து
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. [34835]

## சுப்பையா தியாகராஜா

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சுப்பையா தியாகராஜா அவர்கள் நேற்று (23- 1- 95) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பையா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு, திருமதி அப்பையா அவர்களின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், கமலினி, தியாகினி கோணேஸ்வரன் [யாழ் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத்தந்தையும், தில்லைச்சிவன் (கனடா), ஜெயகரன் [கனடா[ ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாலசுந்தரம், கதிர்காமத்தம்பி, மகேஸ்வரி [யாழ் போதனா வைத்தியசாலை], பத்மநாதன், பரமேஸ்வரி (கால் நடை வைத்திய சாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பேரின்பநாயகம் (R. M. O. பெரிய பண்டிவிரிச்சான்), பாலதேவன் (T. A. நீர்ப்பாசன இலாகா, கந்தளாய்) ஆகியோரின் மைத்துனரும், வைத்தியகலாநிதி சிவசுப்பிரமணியம் (யாழ். போதனா வைத்தியசாலை), பஞ்சலிங்கம் (கண்ணாடித் தொழிற்சாலை நீர்வேலி). சுப்பிரமணியம் ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரரும், சரண்யா, திஷாந்த் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-1-95) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

528/2, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம். (34833)

# ரெல்அவிவ் குண்டு வெடிப்பை அடுத்து மேற்குக்கரை-காஸா எல்லைகள் இஸ்ரேலியப் படையால் மூடப்பட்டன!

நேற்று முன்தினம் இஸ்ரேலியத் தலைநகர் ரெல்அவிவில் இடம் பெற்ற பெரும் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 18இஸ்ரேலியபடையினர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து —

பாதுகாப்பு நடவடிக்கையாக மேற்குக் கரை மற்றும் காஸா பகுதி எல்லைகளை இஸ்ரேலிய படையினர் மூடியுள்ளனர்.

மேலும் பல பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு பொறுப்பான தீவிரவாதிகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரின் பெயர்ப்பட்டியல் ஒன்றை இஸ்ரேல் அரசு பாலஸ்தீன அதிகாரிகளிடம் கையளித்துள்ளது.

சம்பந்தப் பட்டவர்களைத் தண்டிக்க வேண்டும் அல்லது தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இஸ்ரேல் கோரியுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை விசாரிப்பதற்கு இஸ்ரேல் பிரதமர் ரபின் தமது நாட்டு உளவுப் பிரிவினருக்கு பூரண அதிகாரம் வழங்கியுள்ளார்.

இஸ்ரேல் — பலஸ்தீன விடுதலை இயக்க சமாதானப் பேச்சுக்களில் இச்சம்பவம் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடக்கூடும் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஐ)

### ஜனாதிபதி வீட்டில் வெடிகுண்டு மீட்கப்பட்ட சம்பவம்:

# பாதுகாப்புத் துறையின் கவனமின்மை குறித்து அரச எம். பிக்கள் அதிருப்தி

கொழும்பு, ஜன. 24

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரம் நடந்த அரசாங்க கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வாசஸ் தலத்தில் வெடிகுண்டு மீட்கப்பட்ட சம்பவம் குறித்து பிரஸ்தாபிக்சப்பட்டது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள குறைபாடுகள் குறித்தும் —

அது விடயத்தில் பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி உட்பட பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த தலைவர்கள் அதிகம் அக்கறை கொள்ளாதது குறித்தும் எம்.பிக்கள் பலர் கவலை தெரிவித்தனர்.

வெடிகுண்டுகள் மீட்கப்பட்டது போன்ற சம்பவம் ஒன்று வெளிநாடு ஒன்றில் நடந்திருக்குமாயின் பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக ராஜினாமாச் செய்திருப்பர் என்று எம்.பிக்கள் சிலர் சுட்டிக்காட்டினர். (ஐ-6)

## அதிகாரப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புதிய அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டுவரும் போது தீர்வு யோசனைகளையும் அதில் சேர்த்துக்கொள்ள உத்தேசிக்கப் பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தேர்தல்களை எவ்வாறு நடத்துவது? தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல்முறை தொடர்வதை அனுமதிப்பதா? அல்லது தொகுதி வாரியான தேர்தல் முறையைக் கொண்டுவருவதா? — போன்றவை குறித்தும் இந்த உத்தேச அரசமைப்பு நகல் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப் படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## பிரமுகர்களின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைக்கு மாறானது; என்றும்—

அத்தகைய செயலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் —

பிரபல சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பொலீஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## அலரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் —

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்த அறிக்கையில்—

கடந்த நத்தாரின் போது அலரிமாளிகை அறை ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த வெடிப்பொருள் வேறு ஒரு சிப்பாயினால் அலரிமாளிகைக் களஞ்சியத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் —

பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் களஞ்சியத்தில் அது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறுவது சரி என்றால் —

நத்தார் வேளையில் கொண்டு செல்லப்பட்ட வெடிப்பொருள் ஏன் இதுவரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது?

இந்த வெடிப்பொருள் மீன்பிடிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மீன் பிடிக்கத் தேவையான வெடிப்பொருள் அலரி மாளிகைக்குள் கொண்டு செல்லப்பட்டது ஏன்? அங்கு யாருக்கும் அதனை விற்கமுடியுமா? வெடிவைத்து மீன் பிடிக்கக் கூடிய பெரிய நீர்நிலை ஏதும் அலரி மாளிகைக்குள் இல்லையே? — இப்படிப் பல கேள்விகளை கொழும்பு நாளிதழ்கள் வெளியிட்டுள்ளன. (உ-10)

## யாழ். வந்துள்ள பிரதிநிதிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

வடபகுதியின் அவசர புனர்வாழ்வுத் திட்டத்துக்குத் தேவையான பூர்வாங்க செயற்திட்டத்தைத் தயாரிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள ஆலோசனைக் குழுவினர் இன்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச உள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறும. [ஐ-4]

## புதிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழியும்.

★ நாடாளுமன்றுக்குப் பொறுப்பாக — அங்கு எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவராக — பிரதமர் இருப்பார்.

★ அமைச்சர்கள் அரசுக்கு கூட்டுப் பொறுப்புடையவர்களாக இருப்பர்.

★ பிரதமரின் ஆலோசனைப்படி செயற்படும் ஜனாதிபதியே நாட்டின் தலைவராக விளங்குவார். அவர் தனது அதிகாரங்களைப் பிரயோகிப்பதிலும் கடமைகளைப் புரிவதிலும் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பாக இருப்பார்.

★ தனது விருப்பத்தின் பேரில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லாமல் போகும். நாடாளுமன்றத்தின் நம்பிக்கையை அரசு இழக்கும் பட்சத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படும்.

★ குடியுரிமை விவகாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு முழு அதிகாரம் இருக்கும்.

★ உயிர், உடைமைபாதுகாப்பு, அடிப்படை மனித உரிமைகள் முழு அளவில் பேணப்படும்.

★ அரசாங்க சேவை ஆணைக்குழு, நீதிபரிபாலன சேவை ஆணைக்குழு ஆகியவை முற்றிலும் சுதந்திரம் வாய்ந்தவையாகச் செயல்படும்.

★ தற்போதைய அரசமைப்பில் படைத்தளபதிகள், பொலீஸ்மாஅதிபர், தேர்தல் ஆணையாளர், கணக்காய்வாளர், தலைமையதிபதி ஆகியோரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் இனி நீக்கப்படும்.

அனைத்துக் கட்சிகளையும் கொண்ட அரசமைப்புச் சபை ஒன்று அமைக்கப்பட்டு அச்சபை மேற்படி பதவிகளுக்கு உரியவர்களை நியமிக்கும்.

— மேற்படி புதிய அரசமைப்புத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான — நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும் என அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டார். (உ-4-6)

## ரூபவாஹினியில் பகல் நேர ஒளிபரப்பு

கொழும்பு,ஜன. 24

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தனது ஒளிபரப்பு நேரத்தை அடுத்த மாதம்15 ஆம் திகதி தொடக்கம் அதிகரிக்கவுள்ளது.

இதன்படி காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை புதிதாகப் பல நிகழ்ச்சிகள் பகலில் ஒளிபரப்பபடும். பகல் நேர செய்தி அறிக்கையும் அதில் இடம்பெறும். (ஐ-3)

## விஞ்ஞான சங்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் 'பி' பிரிவு ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"வடக்கிற்கான கல்வித்திட்டங்கள்" என்ற தலைப்பில் கலாநிதி என். எதிர்வீ,சிங்கம் அதில் உரையாற்றவுள்ளார். (ஐ)

## சங்கீத பாட ஆசிரியருக்கு கொடுப்பனவு

சங்கீத பாட சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளுக்கான கடந்தவருடகொடுப்பனவுகள் யாழ் நல்லூர் கோட்டங்களுக்குரிய இசை ஆசிரியர்களுக்கு எதிர்வரும்29ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

## கென்னடியின் தாயார் மரணம்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடியின் தாயாரான திருமதி றோஸ் கென்னடி தனது 104 ஆவது வயதில் கடந்த ஞாயிறன்று காலமானார். எஞ்சியுள்ள அவரது மகனான எட்வேட் கென்னடி அச்சமயம் அவர் அருகில் இருந்தார். (ஐ)

## ஹொலண்ட்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இதேவேளை —

ராய்ட்டர், டெய்லி ரெலிகிறாப், கனெடிய தொலைக்காட்சி மற்றும் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்கள் அடங்கிய குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவந்தது. (ஐ-173)

## ஆயுதங்களைத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தது என்பது தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்களை இதுவரை திருப்பி ஒப்படைக்காதவர்களிடமிருந்து அவற்றை கைப்பற்றுவதற்கான திட்டம் ஒன்றை பொலீஸ் தலைமையகம் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

### 95-96 ஆம் வருட காலப்பகுதியில்

# ஆசிரிய கலாசாலைகளில் 1,500 பேருக்கு அனுமதி!

கொழும்பு.ஜன,24

1995-96 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் ஆசிரியர்பயிற்சிக்கல்லூரிகளுக்கு புதிதாக ஆயிரத்து 500 ஆசிரிய பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த அனுமதி தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில பயிற்சி வகுப்பு பேராதனை, பொயாவனை, மகரகம, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இந்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் —

ஏனைய பயிற்சி நெறிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

# இதய அஞ்சலி

எமது குருமடத்தின் அதிபராக விளங்கும்
அருட்திரு ஜீவப்போல் அடிகளாரின்
அன்புத் தந்தை

## ஆசீர்வாதம் போல்

பரமபதம் அடைந்தமைக்கு எம் ஆழ்ந்த துயரத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுதாப அறிக்கையிடுகிறோம்.

புனித வளனார் குருமட
ஆசிரியர்களும், மாணவர்களும்.

(34829)

# மரண அறிவித்தல்கள்

## அருளம்பலம் மகாதேவன் B.A.

(Dip. in Edu. S.L.E.A.S. முன்னாள் கொத்தணி அதிபரும், மல்லாகம் மகா வித்தியாலய அதிபரும்]

அருளம்பலம் மகாதேவன் 23-1-95 காலை இறைவன் அடி சேர்ந்தார். அன்னார் அருளம்பலம் [இளைப்பாறிய கல்வி பரிசோதகர்] தம்பதிகளின் அருமை மகனும், திரு. அ. சகாதேவன், காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி - இராமநாதன் அவர்களின் சகோதரரும், காலஞ்சென்ற வே. இராமநாதன் (இளைப்பாறிய கல்வி அதிகாரி), அவர்களின் மைத்துனரும், திரு. இ. சேதுநாதன் (ஆசிரியர் மல்லாகம் ம வி.), இ. திருச்செந்தில்நாதன், ஸ்ரீ அருளநாதன், பாலமீரா ஆகியோரின் தாய் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 - 1 - 95 பி. ப. 2 மணிக்கு நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. சேதுநாதன்
[மருமகன்]

[7872]

## திருமதி சின்னம்மா நாகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அராலி வடக்கு செட்டியார்மடத்தைச் சேர்ந்த திருமதி சின்னம்மா நாகரத்தினம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் செட்டியாரின் அன்பு மனைவியும், புனிதவதி, சுகிர்தலட்சுமி, விக்கினேஸ்வரன் (ஆசிரியர், சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்), நித்தியலட்சுமி, மகேசன், சிற்சபேசன் (France), சாந்தினி (U. S A) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராசன், பூபாலசிங்கம், சிவானந்தமலர், லங்காதேவி, ஜெகதீஸ்வரி (France), மனோகரன் (U. S. A) ஆகியோரின் அன்பு மாமியாரும், முரளிதரன் (France), பகீரதன் (France), மோகனசுந்தரன் (U. K), தயா, அருந்ததி (Canada), தமயந்தி, அருச்சுனன் (France), ராதை, ராகவன் (Canada), யமுனா, ஐங்கரன், மகிழ்தினி (U. S. A) கலாரஞ்சனி (France), ஆராவமுதன் (Canada), ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், பிரணன் (Canada), நிலக்ஷினி (France) ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (24 - 01 - 95) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அராலி வடக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
நா. விக்கினேஸ்வரன்

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை, (34831)

## கந்தையா தம்பிராசா

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரம், புளியந்தோட்டத்தைச் சேர்ந்த கந்தையா தம்பிராசா அவர்கள் 11-01-1995 இல் சுவிஸில் காலமானார்.

அன்னார் கந்தையா — தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா — பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அன்னலெட்சுமி (நிலா), சந்திராதேவி (காந்தி), சாரதாமணி (ஆசிரியை - புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), யோகமலர் (சுவிஸ்), தேன்மொழி, காலஞ்சென்ற தர்மசீலன், மற்றும் மாலினி (சுவிஸ்), நிமலராணி (வைத்தீஸ்வரா கல்லூரி மாணவி), தேவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பூபாலசிங்கம் (பாலவிநாயகர் ரேடர்ஸ் -கிளிநொச்சி), சோமசுந்தரம் (சுவிஸ்), சண்முகசுந்தரம் (கனடா), சிவசூரியதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருக்கேதீஸ்வரம், மாந்தையைச் சேர்ந்த காலம்சென்ற சண்முகநாதன் மற்றும் கணேசு, குணரட்ணம் (தபால் ஊழியர்), இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரஜீவனின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து நாளை (புதன) காலை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஐ. பூபாலசிங்கம்
(மருமகன்)

14/6, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம் (34836)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24 - 01 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org